வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 02 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 15 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையானது 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 02 | 28,867,616 | - | - |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 10,183 | 02 | 17,959,448 |
| விடுபாடுகள் | - | | 01 | 8,370 |

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 16இ869இ891 பெறுமதியுடைய 06 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 22,416,902 விளைந்திருப்பதுடன் நேரொப்பான

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகை ரூபா 8,638,312 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 4,211,771 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 9,070,380 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

-------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

-------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 3இ307 | 1இ383 | 3இ485 |
| குத்தகை வாடகைகள் | 5இ083 | 6இ514 | 193 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1இ844 | 2இ352 | 49 |
| வேறு வருமானங்கள் | 60இ561 | 56இ336 | 18இ394 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

-----------------------------

பத்து வருடங்களுக்கு மேற்பட்ட சந்தை குத்தகை கடை வாடகை மற்றும் உரிமக் கட்டண நிலுவை ரூபா 176,747 உட்பட அரசிறை கடனாளிகள் நிலுவை ரூபா 3இ551இ852 தொடர்பாக எந்தவித ஆக்கபூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 வருமான பாதிப்பு

--------------------

1999ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அதைத்தும் மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டபோதும் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட வீதி மின் விளக்குகள் பொருத்துதல் சம்பந்தமாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் சபையின் நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,057,455 பெறுமதியான செலவினத்திற்கு மீளளிப்பு கிடைக்காமையால் சபைக்கு வருமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைத்தீர்வையும்

------------------------------------------------------------

i. நீதிமன்றத் தண்டப்பணம்

-------------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றங்களிலிருந்து பெறப்பட வேண்டிய 2012 ஒக்ரோபர் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிக்கான நீதிமன்றக் தண்டப்பணங்கள் ரூபா 170,500 இற்கு சிட்டையிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. முத்திரைத் தீர்வைக் கட்டணம்

-----------------------------------

அ. 2011 மற்றும் 2012ம் ஆண்டுகளுக்கென காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணத்திற்கான பட்டியல் பெறப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

ஆ. 2006 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதிகளுக்கென காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா 17,788,948 இற்கு சிட்டையிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

---------------------------------------------------

2.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

i. சபையின் 21 எண்ணிக்கையான ரூபா 34,050 பெறுமதியான பொருட்கள் 2001 ம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் காணப்படுகின்றன.

விபரம் வருமாறு :

| பொருள் விபரம் | எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| தெளிகருவி | 02 | 19,800 |
| காட்டுக்கத்தி | 19 | 14,250 |
| | 21 | 34,050 |

ii. சபைநிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டதும் நன்கொடையாக வழங்கப்பட்டதுமான 92 எண்ணிக்கையான பொருட்கள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்படுகின்றமை இருப்புக் கணிப்புச் சபை அறிக்கை மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.4.2 அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன்கள்

---

i. சபையின் 11 உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படாத ரூபா 66,806 பெறுமதியான பதவியினர் கடன் நிலுவைகளை ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் பணிக்கொடையில் இருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் மூன்று வருடங்களுக்கு மேலான மீதியாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

2.4.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

---

கணிப்பீட்டுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாத 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 49,965,926 ஆகக் காணப்படுகின்றது

விபரம் வருமாறு :

| விபரம் | தொகை (ரூபா) |
|---|---|
| நிலையான சொத்துக்கள் | 48,617,892 |
| களஞ்சியப் பொருட்கள் | 1,348,034 |
| | 49,965,926 |

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

---------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
| --- | --- |
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i). அத்தியாயம் ஐஐஐ பிரிவு 33 | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வரி மதிப்பீட்டு எழுதுநரால் வரி இறுக்கத் தவறுவோரின் பட்டியலொன்று தவிசாளருக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii). அத்தியாயம் ஐஐஐ பிரிவு 76 | ரூபா 193,757 பெறுமதியான வாடகைகள் மற்றும் குத்தகைகள் கொடுப்பனவு தாமதம் பற்றி அரசிறை எழுதுநரால் தவிசாளருக்கு அல்லது செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii). அத்தியாயம் ஐஐஐ பிரிவு 81 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகள் மற்றும் தண்டப் பணங்களின் மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி | |
| நிதி ஒழுங்கு விதி இலக்கம் - 571 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 15,076 பெறுமதியான நானாவித வைப்புக்களை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) <u>வடமாகாண சபை நிதி ஒழுங்கு விதி</u>

| | |
|---|---|
| நிதி ஒழுங்கு விதி இலக்கம் 101 மற்றும் 102 | உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2006 ம் ஆண்டின் 10 ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2011 இல் அறவிடப்பட்ட ரூபா 57,728 பெறுமதியான நிறுத்தி வைக்கப்பட்ட வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2002 ம் ஆண்டின் 14 ம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் | 2011, 2012ம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட ரூபா 2,872,670 பெறுமதியான பெறுமதி சேர்வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2009 ம் ஆண்டின் 09 ம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்பும் வரிச்சட்டம் | நடைமுறையாண்டில் அறவிடப்பட்ட ரூபா 37,977 பெறுமதியான நாட்டைக் கட்டியெழுப்பும் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (எ) அத்தியாயம் ஏஐஐ பிரிவு 3.2ன் தாபன விதி கோவை | தாபனவிதிக் கோவைக்கு முரணாக ரூபா.20,443 மேலதிக நேர கொடுப்பனவாக பதவினருக்கு வழங்கப்பட்டிருந்தது |
| (ஏ) 31.11.2000ந் திகதிய இல.7.:.1.:.2000 இன் உள்;ராட்சி மாகாண சபை அமைச்சின் சுற்றறிக்கை | வெளிக்கள உத்தியோகத்தர்களிற்கு மாதாந்தம் 5 நாட்கள் மட்டும் விடுமுறைக் கொடுப்பனவு செய்ய கூடியதாக இருந்தும் மாதாந்தம் பொது சுகாதார பரிசோதகர்களிற்கு மாதாந்தம் 6 நாட்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. |

2.6 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---

i. 2010, 2011 ம் ஆண்டுகளில் பிடித்து வைக்கப்பட்ட ரூபா 171,174 பெறுமதியான பிடிபணங்கள் குறித்த ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்தப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii. சனசமூக நிலையங்களுக்குச் செலுத்துவதற்கென 2009, 2010 ம் ஆண்டுகளில் சில்லறைக் கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட சனசமூக நிலைய நன்கொடைகள் ரூபா 115,660 அறிக்கையிடும் திகதி வரை குறித்த சனசமூக நிலையங்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

iii. 2000 ம் ஆண்டில் நிலையான வைப்பிலிடப்பட்ட ஒப்பந்தகாரர் வைப்பு ரூபா 10,000 மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. 2011, 2012 ம் ஆண்டுகளில் சில்லறைக்கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 234,515 பெறுமதியான நிதி குறித்த நபர்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

விபரம் வருமாறு :

| ஒதுக்கீடு செய்த ஆண்டு | ஒதுக்கீடு செய்த நோக்கம் | ஒதுக்கீடு செய்த தொகை ரூபா |
|---|---|---|
| 2011 | மானிப்பாய் பட்டின அலங்கார திரைச்சீலை கொடுப்பனவு | 6,250 |
| 2011 | சீருடைக் கொடுப்பனவு | 8,120 |
| 2012 | மானிப்பாய் பட்டின மின்பிறப்பாக்கி திருத்தக் கொடுப்பனவு | 49,900 |
| 2012 | வீதி விளக்கு பொருத்துதல் கூலி | 41,445 |
| 2012 | கிரவல் ஏற்றிய கூலி | 32,000 |
| 2012 | சீருடைக் கொடுப்பனவு | 96,800 |
| | | **234,515** |

v. ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டு நானாவித வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,691 பெறுமதியான ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை அறிக்கையிடும் திகதி வரை ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

vi. 2011 யூன் தொடக்கம் நவம்பர் வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்ட சம்பளம் ரூபா 87,064 குறித்த உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

### (அ) செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம்

வருடாந்த செயற்திட்டம் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு செயற்திட்டங்களைச் செயற்படுத்தாமையால் நடைமுறையாண்டில் 15 மூலதன வேலைகளுக்கான செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம் காரணமாக எதிர்வரும் காலங்களில் கொடுப்பனவு மேற்கொள்ளவென ரூபா 6,424,876 சில்லறைக் கடனாளிகளில் ஒதுக்கப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு :

| செயற்திட்ட விபரம் | சில்லறைக் கடனாளிகளில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபா |
|---|---|
| வீதிகள் புனரமைப்பு (நெல்சிப்) | 355,922 |
| சங்கானை ஆஸ்பத்திரி வீதிக்கு இடிபாடு பரவுதல் | 185,000 |
| இறக்குமாவத்தை வீதிக்கு இடிபாடு பரவுதல் | 450,880 |
| காடாப்புலம் மாதகல் கொள்கல பகுதிக்கு | 442,500 |

| | |
|---|---|
| இடிபாடு பரவுதல் | |
| மானிப்பாய் பட்டின உழவியந்திர பெட்டி செய்தல் | 325,000 |
| ஆனந்தா வீதி புனரமைப்பு | 234,214 |
| மாரீசன் கூடல் வீதி புனரமைப்பு | 940,373 |
| நவாலி பிரசாத் சந்தை திருத்தம் | 200,000 |
| மாகியப்பிட்டி சந்தை திருத்தம் | 100,000 |
| காடாப்புலம் சுற்றுமதில் புனரமைப்பு | 223,940 |
| வடலியடைப்பு வடிகாலமைப்பு | 2,500,000 |
| உந்து சாந்தை வீதி புனரமைப்பு | 32,047 |
| இராச முருங்கையடி வீதி கிரவலிடல் | 140,000 |
| கொத்துக்கட்டி வீதி மக்கி கிரவலிடல் | 245,000 |
| காக்கைதீவு பகுதிக்கு மக்கி பரவதல் | 50,000 |
| | **6,424,876** |

(ஆ) முற்றாகக் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள்

நடைமுறையாண்டில் நிறைவேற்றவென பாதிடப்பட்ட வீதி திருத்த மற்றும் கால்வாய் திருத்த வேலைகள் தொடர்பாக ரூபா 14,319,000 பெறுமதியான 21 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.8 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

i. வருமான சேகரிப்பு

ii. நிலையான சொத்துக்கள்

iii. நன்கொடை

iv. நானாவித வைப்புக்கள்

v. வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு

vi. கணக்கீடு